DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 320/2025** | |
| Prosecution Witness | | | : | **PW - 2** | |
| Name | : | திரு. கண்ணப்பன் | Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's Name/ Husband | : | திரு.மணி | | | |
| Village | : | வல்லம் கா.நி. | Age | : | 57 |
| Taluk | : | தஞ்சாவூர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of August 2026.

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 02.58**

**முதல் விசாரணை**

நான் தற்போது வல்லம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி தெரியும். இதற்கு முன்பு நாச்சியார்கோயில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 15/02/2025 அன்று காலை 10 மணிக்கு குற்ற தடுப்பு நடவடிக்கைகாக நானும், உதவி ஆய்வாளர் மற்றும் அ .சா.1 ஆகியோர் ரோந்து சென்ற போது , திப்பிராஜபுரம், சேஷம்பாடி பிரிவு ரோட்டில் ஒரே கூட்டமாக இருந்தது. என்ன என்று போய் பார்த்த போது, எதிரி அருண்குமார் த /பெ பாலு , மேலவிசலூர் என்பவர் கையில் அரிவாளை வைத்துக்கொண்டு பிரிவு சாலையில் கண்டபடி தேவடியா மகனே, குச்சிகாரி மகனே என்று திட்டிக்கொண்டு கையில் உள்ள அரிவாளை ரோட்டில் வைத்து தேய்த்து , பொது மக்களை பயமுறுத்திக் கொண்டிருந்தார். நாங்கள் சீருடையில் போனதால் எங்களை பார்த்ததும் பேசாமல் நின்றுக்கொண்டார். உதவி ஆய்வாளர் எதிரியை பிடித்து வந்தார். நாங்கள் பக்கத்தில் நின்றுக்கொண்டிருந்தோம். எதிரி தாமாக முன்வந்து காலை 10.15 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் . அதை உதவி ஆய்வாளர் பதிவு செய்தார் . அதில் நானும், சிறப்பு உதவி

ஆய்வாளர் ராஜேந்திரனும் சாட்சி கையொப்பம் செய்தோம் . அதில் எதிரியும், உதவி ஆய்வாளரும் கையொப்பம் செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த அரிவாளை உதவி ஆய்வாளர் 11.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் , சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜேந்திரனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இன்று இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அரிவாள் தான் எதிரியிடமிருந்து கைப்பற்றிய அரிவாள். அந்த அரிவாள் ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றிய தடயத்துடன் நிலையம் வந்து , உதவி ஆய்வாளர் நாச்சியார்கோயில் காவல் நிலைய குற்ற எண் 75/2025, ச/பி 296(பி) பி.என்.எஸ் ஆக்ட் உ /இ 25(1A) வழக்கு பதிவு செய்தார். அவருக்கு நாங்கள் உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார். நான் நடந்ததை சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

எத்தனை மணிக்கு எங்களுக்கு தகவல் கிடைத்தது என்றால் காலை 09.50 மணிக்கு தகவல் எங்களுக்கு கிடைத்தது. சம்பவம் நடந்த முடிந்து எத்தனை மணி நேரம் சம்பவயிடத்தில் இருந்தோம் என்றால் சம்பவம் நடந்த போதும் அங்கு இருந்தோம். சம்பவம் முடிந்தும் 2 மணி நேரம் அங்கு இருந்தோம்.

சம்பவயிடமானது நீடாமங்கலத்தில் இருந்து கும்பகோணம் மெயின் ரோட்டில் இருந்து நீடாமங்கலம் செல்லக்கூடிய சாலை என்றால் இல்லை. அதன் பிரிவு சாலை சேஷம்பாடி டு திப்பிராஜபுரம் செல்லக்கூடிய சாலை தான். மேற்படி விவரத்தை நான் ஆய்வாளர் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். சேஷம்பாடி மெயின் ரோட்டில் மற்றும்

கடைகள் அருகருகே உள்ளன என்றால் சரிதான். தனிப்பட்ட சாட்சிகள் முன்னிலையில் எதிரியின் பெயர் , மற்றும் முகவரியை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக் கொள்ளவில்லை . ஏற்கனவே எனக்கு தெரியும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்தான், குற்ற எண் தெரியும் என்றால் சரிதான். முதல் நாள் முடித்த குற்ற எண்ணிற்கு அடுத்த குற்ற எண் தான் வரும் என்ற அடிப்படையில் தான் அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் முதல் தகவல் அறிக்கை எண் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக ஏதேனும் குற்ற எண் கொடுத்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு எத்தனை மணிக்கு நான் சென்றேன் என்றால் காலை 10 மணிக்கு சென்றேன். 100 கிமீ தொலைவில் நாங்கள் வந்ததை எதிரியால் பார்க்க முடியுமா என்றால் கூட்டமாக இருந்தால், பார்க்கமுடியாது. என்னை பார்த்ததும் எதிரி ஓட முயற்சித்தாரா என்றால் இல்லை. எதிரியை எங்கள் மூவரில் யார் பிடித்தோம் என்றால் உதவி ஆய்வாளர் பிடித்தார் . எங்கள் ஆய்வாளர் போலிசாரை தவிர வேறு எவரையும் விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் யாரால் எழுதப்பட்டது என்றால் எங்கள் உதவி ஆய்வாளரால் எழுதப்பட்டது. CCTNS யை சேர்ந்த முத்து என்ற காவலர் சம்பவத்தின் போது எங்கள் காவல் நிலையத்தில் இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கணினியால் தான் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . மேற்படி முத்துவை இந்த வழக்கில் ஆய்வாளர் சாட்சியாக விசாரித்தாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்னரே முதல் தகவல் அறிக்கையில் குற்ற எண் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . இந்த வழக்கில் புகார்தாரரும் விசாரணை அதிகாரியும் என் மேல்

அதிகாரியான உதவி ஆய்வாளர் என்றால் சரிதான் . தடயப்பொருளான அரிவாள் பழைய இரும்பு கடையில் கிடைக்கக்கூடியது தான் என்றால் சரியல்ல. எதிரியின் கையில் இருந்து அவராக எடுத்து கொடுத்ததை நாங்கள் வாங்கினோம். சம்பவயிடத்தில் எங்கள் காவல் நிலையம் சார்பில் சி.சி.டி.வி கேமரா வைக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை . ஆனால் நீடாமங்கலம் டூ கும்பகோணம் மெயின் ரோட்டில் 3 இடங்களில் சி.சிடிவி கேமரா வைக்கப்பட்டுள்ளன. சி.சி.டிவி கேமரா பார்த்தால் எதிரி சம்பவ சமயத்தில் அனைவரையும் பார்த்து திட்டினாரா நாங்கள் சாட்சியமளித்தப்படி சம்பவயிடத்தில் ஆயுதத்துடன் நடந்துக்கொண்டாரா , சம்பவயிடத்தில் இருந்தாரா என்பது தெரியவரும் என்றால் சரிதான் . ஆனால், சம்பவயிடம் குறுக்கு ரோட்டில் நடந்துள்ளதால் அந்த குறுக்கு ரோட்டில் சிசிடிவி கேமரா நடந்த சங்கதியின் புட்டேஜை பெற இயலாது . என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் நீடாமங்கலம் டூ கும்பகோணம் மெயின் ரோட்டில் தான் சம்பவம் நடந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போக்குவரத்திற்கு இடையூராக இருந்ததாக தனிப்பட்ட நபர் எவரும் புகார் உதவி ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் பொது மக்கள் யாரும் தங்களை கொலை மிரட்டல் விடுத்ததாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . எதிரி பழக்கப்பட்ட குற்றவாளி என்ற சங்கதி அனைவருக்கும் தெரியும் என்பதால் யாரும் அவருக்கு எதிராக சாட்சியமளிக்க வரமாட்டார்கள் . உதவி ஆய்வாளர் என்னை விசாரித்த போது மேற்படி விவரத்தை அவரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன் . எதிரியின் மாதிரி கைரேகையை பெற்று இந்த வழக்கு தடயப்பொருட்களை கைரேகை நிபுணருக்கு அனுப்பி வல்லூணரிடமிருந்து எதிரியின் கைரேகை ஒப்பீடு செய்து அதன் உண்மை தன்மையை நிரூபிக்க புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் நாங்கள் நேரடியாக சா.பொ.1 யை எதிரியிடமிருந்து கைப்பற்றியதால் அது போன்று அந்த தடயப்பொருளை வல்லூனருக்கு அனுப்பி வேண்டிய அவசியம் எற்படவில்லை . உண்மையில் கைரேகை வல்லூனருக்கு எதிரியின் மாதிரி கைரேகையை பெற்று, தடயப்பொருளையும் அனுப்பி ஒப்பீடுசெய்து பார்த்திருந்தால் அதன் மூலம் உண்மையில் அந்த சா .பொ.1 யை பயன்படுத்தினாரா என்பது பற்றி தெரியவரும் என்றும் சொன்னால் சரிதான். ஆபாசமான வார்த்தைகளால் எதிரி தங்களை திட்டினார் என்று எந்த தனிப்பட்ட சாட்சியும் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எங்கள் முன்னிலையில் தான் திட்டினார். எதிரி எங்கள் முன்னிலையில் தான் கெட்ட வார்த்தையால் பேசினார் என்ற விவரத்தை குறித்து ஆய்வாளர் எனது வாக்குமூலத்தில் பதிவு செய்தாரா என்றால் நான் ஆய்வாளரிடம் அதை சொன்னேன். அவர் அதை பதிவு செய்தாரா இல்லையா என்பது குறித்து எனக்கு தெரியவில்லை . நாங்கள் சென்றதும் கடைகளை பூட்டியதாக சொல்லும் நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக ஏதும் விசாரிக்கவில்லை என்றால் உதவி ஆய்வாளர் தான் அவர்களை விசாரிக்க வேண்டும். சம்பவயிடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் அவரவர் அவரவரது இருச்சக்கர வாகனத்தில் சென்றோம். உதவி ஆய்வாளர் தனியாக அவரது இருச்சக்கர வாகனத்தில் வந்தார். அன்று அனைவரும் சீருடையில் தான் சென்றோமா என்றால் ஆமாம். எனக்கு அன்று என்ன டூட்டி என்பது குறித்து போலீஸ் GD entry பாக்கெட் டைரியை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் பாக்கெட் டைரி GD entry யை வாங்கி பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். சம்பவம் நடந்து முடிந்த பின்னர் எவ்வளவு நேரம் அங்கு இருந்தோம் என்றால் 11.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்த பின்னர் 12 மணிக்கு காவல்

நிலையத்திற்கு கிளம்பிவிட்டோம். மேற்படி சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றும் நான் சொன்ன நாள் , நேரம், இடத்தில் மேற்படி சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றும் , எதிரியிடமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றாலும் தடயப்பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் புள்ளிவிவர கணக்கிற்காக எங்கள் உதவி ஆய்வாளர் போட்ட வழக்கை அனுசரித்து தற்போது தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 03.24**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="3">Case No</td><td colspan="2">:</td><td>S.C : 320/2025</td></tr>
<tr><td colspan="3">Prosecution Witness</td><td colspan="2">:</td><td>PW - 1</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு. ராஜேந்திரன்</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு)</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>தங்கவேல்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>நாச்சியார்கோயில்</td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">61</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>கும்பகோணம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of August 2026.

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 01.17**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று, நாச்சியார்கோயிலில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் நாச்சியார்கோயில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 15/02/2025 ஆம் தேதி காலை 10 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் கலை செல்வன் , சிறப்பு உதவி ஆய்வாளர் கண்ணப்பன் ஆகியோருடன் நானும் குற்றத்தடுப்பு சம்மந்தமாக ரோந்து சுற்றிவரும் போது , திப்பிராஜபுரம் சேசம்பாடி பிரிவு சாலையில் வாகனங்கள் நின்று கொண்டிருந்தன. என்ன என்று பார்த்த போது ஆஜர் எதிரி அருண்குமார், த/பெ பாலு, தெற்கு தெரு, மேலவிசலூர் என்பவர் ஒரு பெரிய அரிவாளுடன் ரோட்டின் அந்தப்பக்கமும் இந்தப்பக்கமும் அரிவாளை சழற்றிக்கொண்டும் , குச்சிகாரி மகனே , தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டிக்கொண்டும் எவனுக்காவது தில்லு இருந்தா வந்து என்னை தொட்டு பாருங்கடா, நான் பெரிய ரவுடிடா என் மேல வந்து பல வழக்குகள் இருக்கு என்று அரிவாளை சுழற்றி ரோட்டில் தீட்டி நெருப்பு பொறி வரவழைத்ததை பார்த்த பொது மக்கள் அங்கிருந்து ஓடியதாகவும், அருகில் உள்ள கடைக்காரர்கள் தங்களது

கடையை சாத்திக்கொண்டிருந்தார்கள் . பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் பங்கம் உண்டாக்கி கொண்டிருந்தவரை கைதுக்கான காரணம் கூறி 10.15 மணிக்கு கைது செய்தும் , 10.30 மணிக்கு அவர் எந்தவித அச்சுறுத்துலும் துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியிடம் படித்து காண்பித்து உதவி ஆய்வாளர் கையொப்பம் வாங்கினார். அதில் சாட்சிகளாக நானும், கண்ணப்பனும் கையொப்பம் செய்தோம். பின்னர் 11.45 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் படுத்திய அரிவாளை மகஜரில் கைப்பற்றினார் . அதில் நானும் கண்ணப்பனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அரிவாளின் நீளம் 43 செமீ, அதில் இரும்பு பாகம் 30 செமீ, கைப்பிடி 11 செமீ, இரும்பு பூண் 2 செமீ இருந்தது. எதிரி மற்றும் தடயங்களுடன் 12.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரி மீது நாச்சியார்கோயில் காவல் நிலைய குற்ற எண் 75/2025, ச/பி 296(பி) பிஎன்எஸ் ஆக்ட் உ/இ 25(1A) ஆயுதச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்த உதவியாக இருந்தோம். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.1.** கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் . அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.2.** என்னிடம் இன்று இந்நீதிமன்றத்தில் காட்டப்படும் அரிவாள் தான் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது . அது **சா.பொ.1.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

சம்பவயிடமானது நீடாமங்கலத்தில் இருந்து கும்பகோணம் மெயின் ரோட்டில் இருந்து நீடாமங்கலம் செல்லக்கூடிய சாலை என்றால் அதன் பிரிவு சாலை சேஷம்பாடி சாலை . மேற்படி விவரத்தை நான் ஆய்வாளர் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். சேஷம்பாடி மெயின்

ரோட்டில் மற்றும் கடைகள் அருகருகே உள்ளன என்றால் சரிதான் . தனிப்பட்ட சாட்சிகள் முன்னிலையில் எதிரியின் பெயர் , மற்றும் முகவரியை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொள்ளவில்லை. ஏற்கனவே எனக்கு தெரியும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்தான், குற்ற எண் தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு எத்தனை மணிக்கு நான் சென்றேன் என்றால் காலை 10 மணிக்கு சென்றேன். 100 கிமீ தொலைவில் நாங்கள் வந்ததை எதிரியால் பார்க்க முடியுமா என்றால் பார்க்கமுடியாது. என்னை பார்த்ததும் எதிரி ஓட முயற்சித்தாரா என்றால் இல்லை. எதிரியை எங்கள் மூவரில் யார் பிடித்தோம் என்றால் மூவரும் சேர்ந்து தான் பிடித்தோம். எங்கள் ஆய்வாளர் போலிசாரை தவிர வேறு எவரையும் விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் நாங்கள் இருக்கும் போது வேறு எவரையும் ஆய்வாளர் விசாரிக்கவில்லை . கைப்பற்றுதல் மகஜர் யாரால் எழுதப்பட்டது என்றால் எங்கள் உதவி ஆய்வாளரால் எழுதப்பட்டது. CCTNS யை சேர்ந்த முத்து என்ற காவலர் சம்பவத்தின் போது எங்கள் காவல் நிலையத்தில் இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கணினியால் தான் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முத்துவை இந்த வழக்கில் ஆய்வாளர் சாட்சியாக விசாரித்தாரா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் கலை செல்வன் என்பவர் தான் சாட்சிகளை விசாரித்தார். அவரை கேட்டால் தான் முத்துவை விசாரித்து வாக்குமூலம் வாங்கியுள்ளாரா, இல்லையா என்பது தெரியும். ஒப்புதல் வாக்குமூலத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்னரே முதல் தகவல் அறிக்கையில் குற்ற எண் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . இந்த வழக்கில் புகார்தாரரும் விசாரணை அதிகாரியும் என் மேல் அதிகாரியான உதவி ஆய்வாளர் என்றால் சரிதான் . தடயப்பொருளான

அரிவாள் பழைய இரும்பு கடையில் கிடைக்கக்கூடியது தான் என்றால் சரியல்ல. எதிரியின் கையில் இருந்து அவராக எடுத்து கொடுத்ததை நாங்கள் வாங்கினோம். சம்பவயிடத்தில் எங்கள் காவல் நிலையம் சார்பில் சி.சி.டி.வி கேமரா வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . வைக்கவில்லை. போக்குவரத்திற்கு இடையூராக இருந்ததாக தனிப்பட்ட நபர் எவரும் புகார் உதவி ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் பொது மக்கள் யாரும் தங்களை கொலை மிரட்டல் விடுத்ததாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . எதிரியின் மாதிரி கைரேகையை பெற்று இந்த வழக்கு தடயப்பொருட்களை கைரேகை நிபுணருக்கு அனுப்பி வல்லூணரிடமிருந்து எதிரியின் கைரேகை ஒப்பீடு செய்து அதன் உண்மை தன்மையை நிரூபிக்க புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . உதவி ஆய்வாளர் அதை அனுப்பவேண்டும் . ஆபாசமான வார்த்தைகளால் எதிரி தங்களை திட்டினார் என்று எந்த தனிப்பட்ட சாட்சியும் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எங்கள் முன்னிலையில் தான் திட்டினார் . எதிரி எங்கள் முன்னிலையில் தான் கெட்ட வார்த்தையால் பேசினார் என்ற விவரத்தை குறித்து ஆய்வாளர் எனது வாக்குமூலத்தில் பதிவு செய்தாரா என்றால் நான் ஆய்வாளரிடம் அதை சொன்னேன் . அவர் அதை பதிவு செய்தாரா இல்லையா என்பது குறித்து எனக்கு தெரியவில்லை . நாங்கள் சென்றதும் கடைகளை பூட்டியதாக சொல்லும் நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக ஏதும் விசாரிக்கவில்லை என்றால் உதவி ஆய்வாளர் தான் அவர்களை விசாரிக்க வேண்டும். சம்பவயிடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் அவரவர் அவரவரது இருச்சக்கர வாகனத்தில் சென்றோம். உதவி ஆய்வாளர் தனியாக அவரது இருச்சக்கர

வாகனத்தில் வந்தார் . அன்று அனைவரும் சீருடையில் தான் சென்றோமா என்றால் ஆமாம். எனக்கு அன்று என்ன டூட்டி என்பது குறித்து போலீஸ் GD entry பாக்கெட் டைரியை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் பாக்கெட் டைரி GD entry யை வாங்கி பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள் . சம்பவம் நடந்து முடிந்த பின்னர் எவ்வளவு நேரம் அங்கு இருந்தோம் என்றால் 11.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்த பின்னர் 12 மணிக்கு காவல் நிலையத்திற்கு கிளம்பிவிட்டோம். மேற்படி சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றும் நான் சொன்ன நாள் , நேரம், இடத்தில் மேற்படி சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றும் , எதிரியிடமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றாலும் தடயப்பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் புள்ளிவிவர கணக்கிற்காக எங்கள் உதவி ஆய்வாளர் போட்ட வழக்கை அனுசரித்து தற்போது தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 02.56**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.